1975 அக்டோபர் 27]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பெல்ட் ஏரியா என்று சொல்லி ஒரு சில விநியோகங்கள் நடைபெற்று வருகின்றன. திரு. டென்னிஸ் கூறியதுமாதிரி மொனாபொலியாக ஒரு சொசைடியில் 10, 12 கடைகள் என்ற முறையில் இருக்கின்றன. அதையெல்லாம் மாற்றுவதோடு இப்போது நிலைமை சீரடைந்து இருப்பதால், அளவை ஓரளவு அதிகமாக்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தை மாதம்தான் உணவு நிலைமை பற்றி முழுவதும் நாம் நம்பிக்கை தெரிவிக்க முடியும்.

உணவுப்பொருள்களுக்குப் போக்குவரத்து ஏற்பாடு

***வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உணவு தானியப் போக்குவரத்திற்கு ரயில்வே வாகன் பற்றாக்குறையை மத்திய அரசின் கவனத்திற்கு மாநில அரசு கொண்டுவந்ததா?

(இ) ஆமெனில், மத்திய அரசு அளித்துள்ள பதில் பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) வாகன்கள் கிடைக்காதது குறித்து முறையீடுகள் வரும்போதெல்லாம் அவற்றை நாம் இந்திய அரசின் நாட்டத்திற்கு கொண்டு வருகிறோம்.

திரு. என். கிட்டப்பா: நம்முடைய தமிழகத்திலே குறிப்பாக உணவுதானியங்கள் ஒரு இடத்திலிருந்து தேவையான மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு ரயில்வே போக்குவரத்தை நம்பிக்கொண்டிருக்கிறோம், அப்படியில்லாமல் லாரிகள் மூலமாக எல்லாப் போக்குவரத்தையும் செய்யக்கூடிய முறையில் ஏற்பாடு செய்வதன் மூலமாக இதை ஒரு பாலிசியாகவே உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே லாரிகள்தான் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

[1975 அக்டோபர் 27

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலே நெல் கொள்முதல் தாமதமாக இருக்கிறதாக விவசாயிகளிடமிருந்து தகவல் வந்திருக்கிறது, காரணம் மழை. ஆகவே, அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்து கொள்முதலை வேகமாகச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆண்டு ஏராளமான கடைகள் திறந்து நாமே லாரிகளில் கொண்டுவர ஏற்பாடு செய்கிறேம். ஆனல் துர்பாக்கியவசமாக தொடர்ந்து மழை பெய்வதால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. உடனடியாக அவற்றைக் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ரெயில்வேயில் எடுத்துப் போகாது, லாரிகளில் எடுத்துப் போவதற்குக் காரணம் ரெயில்வேக்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற கொள்கையை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரெயில் வசதி குறைவானதால் லாரிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. எங்கெங்கு ரெயில் வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் அதைப் பயன்படுத்தலாம்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது ரெயில் வசதி இல்லாத இடங்களில் லாரிகள் பயன்படுத்தப்படுவதாகச் சொன்னர்கள். அண்மையில் லாரிகளில் கொண்டு செல்லக்கூடாது, ரெயில்கள் மூலமாகத்தான் கொண்டு செல்ல வேண்டுமென்று மத்திய அரசிடம் இருந்து தாக்கீது வந்திருப்பதாகக் கூறப்படுகிறதே, அதுபற்றி அரசு ஏதேனும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ரெயில் மூலமாகவும் கொண்டு செல்லலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 500 லாரிகள் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.